**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 48 / 2020**

**வா.சா.1 – முத்தையா** **18.06.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

தாவா சொத்திற்கு மேற்கே சர்வே எண் 143/3 உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 143/3 எனது கிரைய பத்திரத்தில் குத்துக்கால் புஞ்சை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே இளையநாயக்கன் கிராமத்தின் கண்மாய் உள்ளது என்றால் சரிதான். அதுபோல தாவா சொத்தின் தெற்கே கண்மாய் நீர்பிடிப்பு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கே சர்வே எண் 2 ஏ, 2 பி என சொத்து உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கே யாருடைய சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 143/3 சொத்தின் வடக்கு பக்கம் என்ன சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை தவிர்த்து அதற்கு வடக்கே என்னென்ன சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 எனது தகப்பனார் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விபரம் சரியானது தான். வா.சா.ஆ.2 எனது தகப்பனார் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விபரம் சரியானது தான். வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி எனது தகப்பனார் ஒரு சொத்தை கிரையம் வாங்கியுள்ளார். வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் கண்ட நான்குமால் பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான் அப்போதுள்ள நான்குமால் வேறு தற்பொழுது உள்ள நான்குமால் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் வடக்கு மற்றும் கிழக்கு நான்குமாலில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தை

பார்த்தால் தான் சொல்லமுடியும். வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் கண்ட நான்குமால் படி பூமியில் சொத்து இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சர்வே எண் 143/3 சொத்திற்கு சிலம்பன் மற்றும் எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது. சர்வே எண் 143/3 வா.சா.ஆ.1 ஆவணம்படி கிரையம் பெற்றதாகும். எனது தகப்பனார் 2010 ல் இறந்துபோனார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை தாவா சொத்திற்கு பட்டா பெற முயற்சி செய்தாரா என்றால் முயற்சி செய்தார். எனது தகப்பனார் பட்டா பெற முயற்சி செய்தார் என்பதை பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. 1974 முதல் எனது தகப்பனார் இறக்கும் வரை தாவா சொத்தை அனுபவத்தார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் பட்டா நடவடிக்கை 2012 முதல் ஆரம்பித்தேன். நான் பட்டா நடவடிக்கை எடுத்த போது 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை 2008 ல் கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரிய வந்தது. நான் மேற்கொண்ட பட்டா நடவடிக்கையில் தீர்வு கிடைக்காததால் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.95/2015 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்மந்தமாக 2வது மேல்முறையீடு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டாவது மேல்முறையீட்டை நாங்கள் தான் தாக்கல் செய்தோம். நான் 2012 ல் பட்டா நடவடிக்கை மேற்கொண்டபோது 1ம் பிரதிவாதி இராமமூர்த்தி பெயரில் பட்டா இருந்தது. யு.டி.ஆர் காலத்தில் வேலுச்சாமி பெயரில் பட்டா இருந்தது. மேற்படி வேலுச்சாமி 2ம்

பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமான 'அ' பதிவேட்டை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்தின் வடபுறம் 2ஏ மற்றும் 2 பி சொத்துக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண் 143/2ஏ 1ம் பிரதிவாதி பெயரில் தற்போது உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு கிழக்கே உள்ள சொத்து 2 பி யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. 2 பி சொத்திற்கு கிழக்கே என்ன சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கே வடக்கே 143/1 உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 143/2 மற்றும் 143/4 சுமார் 10 ஏக்கர் அளவுள்ள சொத்துக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து மற்றும் அதன் வடக்குபுறம் உள்ள சொத்துக்களை 2ம் பிரதிவாதியின் தகப்பனார் 1946 மற்றும் 1947 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து செட்டில்மெண்ட் காலத்தில் தவறுதலாக கண்மாய் என்று பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதை 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பட்டா நடவடிக்கை எடுத்ததன் பேரில் யு.டி.ஆர் காலத்தில் அவரது பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1946 முதல் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் அனுபவித்து அவர் காலம் சென்ற பின்பு அவரது மகனான 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்ளை அடைந்து பட்டா மாற்றி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. யு.டி.ஆர் காலத்தில் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனது தகப்பனாருக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது தகப்பனாருக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் எனது தகப்பனார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை

பொறுத்து கண்ணப்பன் வகையறாவிற்கு எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் எனது தகப்பனாரோ நாங்களோ தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் செங்கல் சூலை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி செங்கல் சூலை வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம்பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதாக முந்தைய வழக்கான அ.வ.எண்.95/2015ல் ஒப்புக்கொண்டு தற்பொழுது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 143/2 உள்ளது அந்த சொத்தில் தான் 1ம் பிரதிவாதி செங்கல் சூலை வைத்துள்ளார். சர்வே எண் 143/2 பாதையை ஒட்டி உள்ளது. சர்வே எண் 143/2க்கு தெற்கே என்ன சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 143/2க்கு கிழக்கே என்ன சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 143/2ன் வடக்கே பாதை உள்ளது. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்து 2ம் பிரதிவாதியால் விவசாயம் செய்யப்பட்டு வந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு தாவா சொத்தின் ஒரு பகுதியில் விவசாயமும் ஒரு பகுதியில் செங்கல் சூலையும் வைத்து 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு தனது மனைவிக்கு தானமாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை வங்கியில் அடமானம் வைத்து 1ம் பிரதிவாதியும்

அவரது மனைவியும் கடன் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு சட்டப்படி அனுபவம் செய்து வருகிறார் என்றும் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் நான்குமால் பிராதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்த முந்தைய வழக்கு நடவடிக்கைகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் சரியல்ல. பிராதில் அசல் வழக்கு எண் மட்டும் கூறிவிட்டு மேல்முறையீட்டு வழக்குகளின் எண்ணை குறிப்பிடாததால் உண்மைகளை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களில் எங்களுக்கோ எனது தகப்பனாருக்கோ எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த நபருக்கோ எந்த வித பாத்தியமும் இல்லாததால் நாங்கள் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை